யார் திறந்தால் என்ன?



“அறிதலே அறிவு. அறிவின் கூர்மையே பகுத்தறிவு” என்ற தந்தை பெரியார் கட்டமைத்த திராவிட இயக்கம் என்பது அறிவியக்கமாக செயல்பட்டு வருவதால் தான், தமிழ்நாடு உலக நாடுகளை ஒத்த வளர்ச்சியை எட்டி இருக்கிறது. திராவிட இயக்க வழிவந்த தி.மு.க தலைமையிலான ஆட்சி எப்போதெல்லாம் தமிழ் நாட்டில் அமைந்ததோ, அப்போதெல்லாம் அறிவுச் சுரங்கங்களாக இருக்கும் நூலகங்களில் வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்காற்றி இருக்கிறது. குறிப்பாக, **தமிழ் நாடு பொது நூலக இயக்ககத்தை 1972ஆம் ஆண்டில் உருவாக்கியவரே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.** அதன் பிறகு பெருநகரங்கள் மட்டுமின்றி குக்கிராமங்களிலும் சிறப்பான நூலக சேவை கிடைப்பது உறுதி செய்யப்பட்டது. அதற் கெல்லாம் முத்தாய்ப்பாக மூன்று நூற்றாண்டு களை கடந்துள்ள சென்னை மாநகரின் அடையாளங்களில் ஒன்றாக **“அண்ணா நூற்றாண்டு நூலகம்”** உருவாக்கப்பட்டது. உலகம் வியக்க அதனை பார்த்துப் பார்த்து உருவாக்கித் தந்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

இப்படி அறிவியக்க வழியில் வந்ததோடு மட்டுமின்றி, அறிவுப்புரட்சிக்கும் நூலக கட்டமைப்பை வலுப்படுத்தி வித்திட்ட முத்தமிழறிஞரின் நூற்றாண்டை அர்த்தப்படுத்திடும் வகையில் தான், **‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’** மதுரையில் நம் முடைய கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் உருவாக்கப்பட்டது. மாமதுரையின் பெயர் சொல்லும் அடையாளங்களில் ஒன்றாக அந்த நூலகம் இயங்கி வருகிறது. பல்லாயிரக்கணக்கான மாணவச் செல்வங்களும், போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளையோரும் பயன்படுத்தி பயனடைந்து வருகிறார்கள்.

அதற்கு கிடைத்த வரவேற்பும், மாணவச் செல்வங்கள் அடைந்த பயனையும் கவனித்த நம் தலைவர், கோவையிலும் பிரமாண்ட நூலகத்தை அறிவியல் மையத்தோடு சேர்த்து அமைக்க முடிவு செய்தார். திராவிட மாடல் அரசின் 2024-2025 நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பை வெளியிட்டார்கள். 2024 அக்டோபர் 14 அன்று பொது நூலகத்துறை சார்பில் நூலகம் அமையவுள்ள இடத்தை துறையின் அமைச்சர் என்கிற முறையில் நேரில் ஆய்வு செய்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக 2024 நவம்பர் 06 அன்று கோவையில் நடைபெற்ற பிரமாண்ட நிகழ்ச்சியில் அடிக்கல்லும் நாட்டினார். பொதுப் பணித்துறை மூலம் விறுவிறுப்பாக நடைபெற்ற கட்டுமான பணிகளை பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சராக 2025 ஜூன் 28 அன்று நேரில் பார்வையிட்டிருந்தேன். கட்டுமான பணிகள் நிறைவுற்று இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வந்த நிலையில் 2026 பிப்ரவரி 27 அன்று கழகத்

முன்னாள் அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி

தலைவர் அவர்களே நேரில் ஆய்வு செய்திருந்தார்.

இப்படி திராவிட மாடல் அரசு பார்த்துப் பார்த்து உருவாக்கிய **“பெரியார் அறிவுலகத்தை”** புதிதாக அமைந்துள்ள Take Diversion அரசு திறந்து வைக் காமல் காலம் தாழ்த்தி வருவதைக் குறிப்பிட்டு கடந்த 2026 ஜூன் 6 அன்று காணொலி ஒன்றி னையும் வெளியிட்டு இருந்தேன். கோவையின் மாபெரும் அடையாளங்களில் ஒன்றாக திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்டுள்ள கோவை பெரியார் அறிவுலகம் தற்போது திறப்பு விழா கண் டிருக்கிறது. இந்த நேரத்தில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகள் முக்கியமானவை. **“யார் திறந்தால் என்ன? திறந்து வைப்பதா பெருமை? எதையும் திட்டமிட்டு உருவாக்குவதே பெருமை! அப்பெருமை என்றும் கழகத்துக்கே உரித்தானது!”**. இதுதான் நம்முடைய தலைவரின் பெருந்தன்மை; திராவிட இயக்கத்தின் நிலைத்தன்மை! (Sustainability).

கோவையில் பெரியார் அறிவுலகம் மட்டு மல்லாமல்

- **திருச்சியில் பெருந்தலைவர் காமராசர் நூலகம்,**
- **சேலத்தில் பாரதிதாசன் அறிவுலகம்,**
- **கடலூரில் அஞ்சலை அம்மாள் நூலகம்,**
- **நெல்லையில் காயிதே மில்லத் நூலகம்**

ஆகியவையும் திராவிட மாடல் அரசால் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, சிறப்பாக உருவாகி வருகிறது.

தனது மாநில மக்களின் நலனுக்காக உழைத்த தலைவர்களின் பெயர்களில் மாநிலம் முழுவதும் அறிவுத்திருக்கோயில்கள் அமைந்துள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அந்த பெருமையை உருவாக்கியது திராவிட மாடல் அரசுதான்!

மாணவனை அறிவுள்ள பகுத்தறிவுமிக்க மனிதனாக வளர்ப்பதுதான் ஒரு பள்ளியின் பெருமையாக இருக்க முடியும். ஒரு ஆசிரியரின் பெருமையாக இருக்க முடியும். அதேபோல **அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்குவதுதான் ஒரு தலைவனின் பணி! கொள்கையின் பணி! அப்பணியை தலைவராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், கொள்கையாக திராவிடமும் செய்தது. தொடர்ந்து செய்யும்.**

தமிழகம் உள்ளட 17 மாநிலங்களில்

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம்!

தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, அக்.18-

தமிழகம் உள்ளட 17 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் மேற்கொள்வதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

எஸ்.ஐ.ஆரை வைத்து வாக்குரிமை பறிக்கப்படுவதாகவும், இந்த முறைகேடு களுக்கு காரணமான தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்நிலையில், 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணியை மேற் கொள்ள தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், பீகார் உள்ளிட்ட 17 மாநிலங் கள் மற்றும் யூனியன் பிரதேசங் களில் இந்தத் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் புதிய வாக்காளர்கள் மற் றும் ஏற்கனவே வாக்காளர் பட் டியலில் இடம்பெறாமல் விடு பட்ட வர்களைச் சேர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் சேர்க்கை நடைபெறும். இதற்கான வரைவு வாக்காளர் பட்டியல் நவம்பர் 12 ஆம் தேதி வெளியி டப்படும். நவம்பர் 12 முதல் டிசம்பர் 11 வரை இப்பணிகள் மேற்கொள்ளப்படும். இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் தேதி வெளியிடப்படும் என் றும் தேர்தல் ஆணையம் தெரி வித்துள்ளது.

பருவமழை முன்னெச்சரிக்கை:

பூந்தமல்லியில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் ஆய்வு!

தி.மு.க. நகரமன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் மேற்கொண்டார்!

திருவள்ளூர், அக்.18-

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சிக் குட்பட்ட 8 முதல் 15ஆவது வார்டு வரையுள்ள 8 வார்டுக ளில் மழை நீர் தேங்கி பாதிப்பை ஏற்படுத்தி வருகி றது.

இதனால் அப்பகுதிகளுக்கு சிறப்பு சுவனம் செலுத்தி நட வடிக்கை எடுப்பது குறித்து பூவி ருந்தவல்லி நகர்மன்றத் தலை வர் காஞ்சனா சுதாகர், நக ராட்சி அதிகாரிகள் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக, அம்பேத்கர் நகர், அம்மான் நகர், பெரியார் நகர், லட்சுமி நகர், சீனிவாசா நகர், நண்பர்கள் நகர், சாய்ந கர், லட்சுமிபுரம் சாலை, மலை யம்பாக்கம் சாலை, பைபாஸ் சாலை, அணுகுச் சாலை உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் பாதிக் கப்பட்டனர்.

அதனைக் கருத்தில் கொண்டு வரும் பருவமழை காலத்தில் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக் கைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

பல்வேறு ஊராட்சிகளில் இருந்து அதிக அளவில் மழை நீர் வண்டலூர் மீஞ்சூர் வெளி வட்டச் சாலையை கடந்து மாங்காடு நகராட்சிக்கு வந்த தால், அங்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டது.

மாங்காட்டில் வெள்ளப் பாதிப்பை தடுக்க வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்டச் சாலை யில், சாலையோரம் வழியாக சிக்கராயபுரம் கல்குவாரிக்கு செல்லும் வகையில், கால்வாய் 2022ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது. கால் வாயை தூர்வாரி மழை நீரை கல்குவாரிக்கு கொண்டு செல் வதற்கு நெடுஞ்சாலைத்துறை மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட நிர்வா கங்கள் ஒருங்கிணைந்து நடவ டிக்கை எடுப்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.

தன்மானத் தலைவரின் மதிநுட்பமும் தற்குறிகளின் தடுமாற்றமும்

இடைத்தேர்தல் என்பதை விட “கூட்டணி எடைத்தேர்தல்” என்றே கூற வேண்டும். மழைக் காளானாய் முளைத்த கனவுக் கட்சிக்கு தாராபுரம் மதுராந்தகம் இடைத்தேர்தல்கள் பரிசோதனை களமாய் பார்க்கப்பட்டது. இதுவரை தமிழகம் சந்தித்திராத மின்வெட்டும் அரிவாள் வெட்டும் பாலியல் வன்கொடுமைகளும் பல சரக்கு விலை உயர்வும் மக்களை பெரும் அச்சத்துக்குள் ஆழ்த்தி இருந்த வேளையில் நடைபெற்று முடிந்தது இடைத்தேர்தல்.

தாராபுரத்தில் தன்மானத் தலைவரின் ரோடு ஷோவை பார்க்க பொது மக்கள் பொது அமைப்புகள் எனப் பலரும் காலையிலிருந்து சாலையின் இருபுறத்திலும் திரண்டு இருந்தது மக்கள் தலைவனை மதிக்கும் மாண்பை வெளிப்படுத்தியது. மூத்த தி.மு.க. கழகப் பெருந்தொண்டர் தந்த மாலையை அக்கூட்ட நெரிசலிலும் வாங்கி மாலையிட்டு மதிப்பளித்தது பார்ப்பவர் மனதை நெகிழச் செய்தது.

பொதுக்கூட்டமா? மாநாடா? என்று வியக்கும் வண்ணம் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அணி திரண்டிருந்தனர். பொதுக்கூட்டத்திடலுக்கு வருகை புரிந்த இனமானத் தலைவரின் வண்டியும் வழியில் தி.மு.க. தொண்டர்களின் பெருங்கூட்டத்திற்கிடையே சிக்கிக் கொண்டது. தலைவரின் தலைசிறந்த தார்மீக உரையை அட்டைக்கத்தியால் அறுக்க முயன்றனர் தற்குறிகள்.

தி.மு.க. முதன்மைப் பிரச்சாரகரில் ஆசிரியர் வீரமணி, கவிஞர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., இளம் தலைவர் உதயநிதி, தே.மு.தி.க. பிரேமலதா விஜயகாந்த், ஜவஹிருல்லா, தமிமுன் அன்சாரி போன்றோரின் பிரச்சாரக் களங்கள் மக்களை ஒரு திசை நோக்கிய வாக்குப்பயணத்தை உருவாக்கியது.

இஸ்லாமிய வாக்காளர்களை கவருவதற்காக களம் இறக்கப்பட்ட அமைச்சர்கள் ஷாஜகான், ஃபெரோஸ் ஆகியோருக்கு கிடைத்த அனுபவம் இஸ்லாமியர்கள் வாக்குகளால் மட்டுமல்ல வாய்மையாலும் தி.மு.க.வின் பக்கமே நிற்கின்றனர் என்பதை தேர்தல் முடிவுகள் அடித்துக் கூறின.

தி.மு.க. முன்னாள் அமைச்சர் பெருமக்களின் வாக்குச் சேகரிப்பு முறைகளும் கிராமங்களில் முகாமிட்டு மக்களோடு மக்களாக கலந்து பேசிய விதமும் தாராபுரம் வாக்காளர் களை புதிய அனுபவத்திற்கு ஆளாக்கியது.

தாராபுரம் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து அமில சோதனைக்கு ஆளானார் த.வெ.க. வேட்பாளர். பல இடங்களிலும் விரட்டப்பட்டார். ஏமாந்தவர்களின் ஏவுகணை பேச்சால் எட்டுப்பட்டி போலீஸையும் அழைத்துக் கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார். விஜயின் சாலைப் பயணம் ந(ர)கர மக்களின் சோதனைப் பயணமானது.

தாராபுரம் கோவிந்தாபுரம் பகுதியில் தேர்தல் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக தேர்தல் பறக்கும் படையால் 5 கோடி ரூபாய் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா மகனின் காரில் கைப்பற்றப்பட்டது (உளவுத்துறை செய்தி). ஆனால், முன்னாள் அ.தி.மு.க. (த.வெ.க.) செயலாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப் பட்டது. தூய சக்தியின் அவலட்சணம் இப்படியாக இருக்க மற்றொரு புறத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியது போல Panic Buying (தாறுமாறாக விலைக்கு வாங்குவது) தொடங்கியது. பிற கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஜாதி மதத் தலைவர்களுக்கும் 5 கோடி ரூபாய் வரை தேர்தல் பரிசாக வழங்கப்பட்டது.

கடைசி நேரத்தில் வெளியான விஜய் கட்சி வேட்பாளர் சத்தியபாமாவின் “ஏளனக் காணொளி” தேர்தலில் அதிர்வை ஏற்படுத்தியது. அது வரை அவர்கள் போட்ட ஏமாற்று திட்டங்கள் தவிடுபொடியாகும்படியாக அமைந்தது.


“கேரவன் மைனர்” ஐ தாராபுரம் மக்கள் கொத்து பரோட்டா போட்டனர். 100 கிலோ மீட்டர் சுற்றி வந்து 50 கோடி ரூபாய் செலவு செய்தும் கிடைத்த பயன் தலைசுற்றி நின்றது தான்.

“தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல்” என்ற கூட்டணி கணக்குகளுக்கு இனி வேலை இல்லை என்ற புதிய தேர்தல் பாதையை உருவாக்கியது இத்தேர்தல்.

வாக்குப்பதிவு முடிவுகள் இரண்டு உண்மைகளைப் பேசின. தபால் வாக்குகளில் 35 சதவீதம் கலந்த பொதுமக்களின் வாக்கு சீட்டு பதிவு முறையில் தி.மு.க.வின் வெற்றியை 47.15 சதவீதம் என்ற ஆதாரத்தை அறிவித்தது.

ஒவ்வொரு சுற்றிலும் வாக்குப் பெட்டியின் மாயாஜாலம் நடந்து கொண்டே இருந்தது. ஆனால் 23 வது கடைசி சுற்றில் அம்பலமானது தேர்தல் கமிஷன் மண்டி. தி.மு.க. 39 சதவீதம் பெற்று முதலிடம் பெற்றும் த.வெ.க. 26 சதவீதம் பெற்று மூன்றாம் இடத்திலும் சந்தி சிரித்தது.

நரி பரியாகாது! தற்குறி ஒருபோதும் ஆச்சரியக்குறியாக முடியாது என்பதே இந்த இடைத்தேர்தல் சொல்லும் வலுவான உண்மை.



திராவிட மைந்தன்,
தாராபுரம்.

காலம் கடந்து நிலைத்து நிற்கும்

வீரத்தின் அடையாளம் கட்டபொம்மன் புகழ் ஓங்கட்டும்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலை தளப்பதிவு!

சென்னை, ஆக். 18-

வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளையொட்டி, நேற்று முன்தினம் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் வீரத்தின் அடையாளம் கட்டபொம்மன் புகழ் ஓங்கட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலை தளப்பதிவு வருமாறு:-

விடுதலைப் போரில் வீரத்தாலும் தியாகத்தாலும் தனக்கென தனி வரலாறு படைத்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவு நாள் இன்று.

தமிழ்நாட்டில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற சுயமரியாதைப் போராளி.



துளியும் சஞ்சலமின்றி தூக்குக் கயிற்றின் முன்பு கூட தீரத்தோடு நின்று உயிர் நீத்தவர்.

கட்டபொம்மன் நினைவைப் போற்றும் வகையில் அவரது கம்பீரச்சிலையை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைத்தது நம் திராவிட மாடல் அரசு!

திருமங்கலம் - கள்ளிக்குடி இடையே கட்டப்பட்ட மேம்பாலத்துக்கு ‘கட்டபொம்மன்’ மேம்பாலம் என்று பெயர் சூட்டினார் நம் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்கள்.

காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் வீரத்தின் அடையாளம் கட்டபொம்மன் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



அறிவுசார் உலகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கில் கோவை மாநகரில் ” பெரியார் அறிவுலகம் அமைத்துத் தந்த கழக தலைவர், எந்நாளும் மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி கோவையின் பெருமைமிகு இந்த அடையாளத்தை கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ. அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். இதில் கோவை மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.